Ti Nb Ir Ta Ru Pt

Ti Anode Fabricators Pvt. Ltd.

Tiaano® Innovation In Inert Metals 23 YEARS Since 1992

# 48 Noothanchary, Madambakkam, Chennai – 126, India. Ph: +91 44 2278 1148 Fax: 22781362 Mob: +91 94445 69900 Email: marketing@tianode.com Web: www.tianode.com

# “கண்டம் விட்டு கண்டம் தாண்டி நாளை அண்டம் ஆளும் இந்தியா”

## GOAL 2015-2016

- **Endeavor** : QUALITY
- **Turnover Target** : 156% ↑
- **Products for …**
  - Consumer Market : 3%
  - Green Environment : 25%
- **Rejection Rate** :100% ↓

## TESTIMONIALS

- **Customers…**
  - Up to Oct. 15 : 901 Nos.
  - Up to Sep. 15 : 896 Nos.
- **Performance Oct. 15 …**
  - Turnover growth : 1.50%
  - Employment growth : 0.55%
  - 100% Attendance : 17.31%

## MANAGEMENT

- **Managing Director**
  - Mr. V. P. Jeyakumar
- **Board of Directors**
  - Ms. P.E. Nancy
  - Mrs. J. Vanajambika

## OUR FORMULATIONS

Tiaano® Innovation In Inert Metals – Electro Chemical & Exotic Metal Equipments


Aquafil Results for environment – Water Treatment Equipments.

Fib Tec COMPOSITE – FRP/ GRP Equipments.

HydroGen™ Go Green – HHO Generators

Titanictrade WE DELIVER VALUE CHAIN – Portal for Exotic Metals

Tiaano Vidyashrm – Tiaano Vidyashrm (CBSE Curriculam)




## அன்பே பெரியது!

ஒரு நாள் காலை அந்தப் பெண் எழுந்து தன் வீட்டுக் கதவை திறந்த போது, அங்கு நீண்ட தாடியுடன் மூன்று முதியவர்கள் வீட்டு திண்ணையில் அமர்ந்திருந்தனர். அவர்களைப் பார்த்த அந்தப் பெண்மணி, “ஐயா, நீங்கள் யாரென்று நான் அறியேன். எனினும் உங்களைப் பார்த்தால் மிகவும் பசியில் வாடுவது போல் தெரிகிறது. வீட்டிற்குள் வாருங்கள். உங்கள் பசியாற உணவு தருகிறேன்” என்றாள். இதைக்கேட்ட ஒரு முதியவர் அவளைப் பார்த்து “அம்மா! அவர் பெயர் “செழிப்பு”, இவர் பெயர் “வெற்றி”, என் பெயர் “அன்பு”, எங்களில் யாராவது ஒருவரைத் தான் நீங்கள் உள்ளுக்குள் அழைக்க முடியும் நாங்கள் மூவரும் ஒரே நேரத்தில் எந்த வீட்டிலும் நுழைவதில்லை.

ஆகவே, நீங்கள் வீட்டிற்குள் சென்று உங்களது வீட்டாரோடு ஆலோசித்து பின்னர் எங்களில் யாரை கூப்பிடுவதென்று முடிவெடுங்கள் என்றார்கள். “என்ன சந்தோஷமான விஷயம் இது?” என்றார் கணவர். “நாம் செழிப்பை அழைப்போம். இல்லை! இல்லை! வெற்றியை அழைப்போம். வெற்றி வந்தால் செழிப்பு தானாகவே வந்துவிடுமல்லவா?” என்றாள்.

இதை அமைதியாக கேட்டுக் கொண்டிருந்த மருமகள் வந்து, “அம்மா! நாம் அன்பை அழைப்போம். அன்புடையவர் எல்லாமுடையவர் என்று வேதம் சொல்லுகிறதே” என்றாள்.

ஆமாம்! நமது மருமகள் சொல்லுவது போலவே செய்வோமென்று முடிவெடுத்தனர். கதவைத் திறந்து, “ஐயா! உங்களில் ‘அன்பு’ யாரோ அவர் மாத்திரம் உள்ளே வாருங்கள்” என்றாள்.

உடனே “அன்பு” என்பவர் எழுந்து உள்ளே வர, மற்ற இருவரும் கூட எழுந்து உள்ளே வரத் துவங்கினர். “ஏன் நீங்களும் வருகிறீர்கள்?” என்று அந்தப் பெண் கேட்க, அம்மா! அன்பு எங்கே இருக்கிறதோ அங்கு செழிப்பும், வெற்றியும் கண்டிப்பாக இருக்க வேண்டுமென்பது நியதி. நீங்கள் “செழிப்பையோ” அல்லது “வெற்றியையோ” கூப்பிட்டிருந்தால் மற்ற இருவரும் வந்திருக்க மாட்டார்கள். ஆனால் நீங்கள் அன்பை கேட்டதினால், இவை இரண்டும் இப்போது உங்களுடையதே” என்றனர்.

*Compiled By : Ms. P. E. Nancy*
*Director – Admin*

### Business Success

A Business succeeds
not because it is large
or because it has been
established long time.....but
it succeeds due to the people in it,
who live , love, dream,
and build great plans and implement them.

## FUNCTIONAL WISHES



Merry Christmas
25th December

**Best Wishes from Tiaano Employees**

## EXTERNAL SUPPORT

| | |
|---|---|
| Banking | : M/s. UCO Bank |
| Auditing | : M/s. Nisar & Kumar |
| AQ Auditing | : M/s. Juran Quality |
| Legal Advisers | : Lr. M.K. Govindan |
| | : Lr. V. Benedict Vincent |
| Tech. Consultant: | Dr.G.S. Viswanath |
| Central Excise | : Mr. R. Raghavan |
| Health Care | : M/s. Bethesda Hospital |
| | Tel: 22294565 |
| ESI Corporation | : Tambaram Dispensary |
| | Tel: 044 2226 0194 |

## BIRTH DAY WISHES

எந்தக் குழந்தையும் நல்லக் குழந்தைதான் மண்ணில் பிறக்கையிலே!
அவர் நல்லவராவதும் தீயவராவதும் அன்னை வளர்ப்பினிலே!



**Mrs. S. Valli** — **05th Dec.**
Fibtec

**Mrs. M. Indumathy** — **06th Dec.**
Purchase

**Mr. S. Purushothaman** — **10th Dec.**
Production

**Mr. V.P. Jeyakumar** — **12th Dec.**
Managing Director

**Best Wishes from Tiaano Employees**

### Things To Keep

Keep your thoughts positive, because your thoughts, become your words.

Keep your words positive, because your words, become your actions.

Keep your actions positive, because your actions, become your habits.

Keep your habits positive, because your habits, become your lifestyle.

Keep your lifestyle positive, because your lifestyle, become your destiny.

- Mahatma Gandhiji

## மெக்சிகோவில் ஓடும் கார்கள் மூலம் மின்சாரம் தயாரிப்பு

மெக்சிகோவில் ஓடும் கார்கள் மூலம் மின்சாரம் தயாரிக்கப்பட்டுள்ளது. எரிசக்தி, அணுசக்தி, காற்று, நீர் என்று பல வழிகளில் மின்சாரம் தயாரிக்கப்பட்டு வருகிறது. இந்த நிலையில் தற்போது ஓடும் கார்கள் மூலம் மின்சாரம் தயாரிக்கும் தொழில்நுட்பம் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது. இதை மெக்சிகோவின் தொழில் முனைவோர்கள் கண்டுபிடித்துள்ளனர். போக்குவரத்து தங்கு தடையின்றி இல்லாத பகுதிகளில் ஓடும் கார்களில் இருந்து மிகக் குறைந்த செலவில் மின்சாரம் தயாரித்துள்ளனர்.

தெருக்களில் 5 செ.மீ உயரத்துக்கு வேகத்தடைகளை ஏற்படுத்தி அதன் மூலம் ஏற்படும் காற்றழுத்தம், அதிநவீன தொழில் நுட்பம் ஆகியவற்றின் மூலம் மின்சாரம் உருவாக்கியுள்ளனர். இதே முறையை பயன்படுத்தி மெக்சிகோவின் பல நகரங்களில் குறைந்த செலவில் மின்சாரம் தயாரிக்க திட்டமிடப்பட்டுள்ளது. தங்கு தடையற்ற, மக்கள் நடமாட்டம் அதிகமுள்ள இடங்களிலும் இம்முறையை பயன்படுத்தி மின்சாரம் தயாரிக்கலாம் என நிபுணர்கள் தெரிவித்துள்ளனர்.

## உயர் இரத்த அழுத்தத்தை குறைக்க யோகர்ட்(தயிர்) சாப்பிடுங்கள்

பால்பொருட்களில் ஒன்றான தயிரை உணவில் அதிகமாக சேர்த்துக்கொள்வதால், உயர் இரத்த அழுத்தத்திற்கான இடர்வாய்ப்பை குறைக்கக்கூடும் என்று ஒரு புதிய ஆராய்ச்சி தெரிவிக்கிறது.

நீண்ட காலமாக தயிர் சாப்பிடும் நபர்களுக்கு உயர் இரத்த அழுத்தம் வரும் வாய்ப்பு மிகக்குறைவாக இருக்கிறது என்றும் தயிர் சாப்பிடாதவர்களைவிட, சாப்பிடுபவர்களுக்கு சிஸ்டாலிக் இரத்த அழுத்தம் இருப்பதாகவும் இந்த ஆராய்ச்சி அறிக்கை குறிப்பிடுகிறது.

*Compiled By : Mr. K. Manivannan*
*Marketing*

## ஆப்பிள் மேல் ஒட்டி இருக்கும் Sticker எதற்காக...

நாம் வாங்கும் ஆப்பிள் மேல் Sticker ஒட்டி இருக்கும். அதைப் பார்த்தால் அதில் எண்கள் காணப்படும். அது எதற்காக என்பது பலருக்கும் தெரியாது. அதுபற்றி அறிந்தால் நமக்கு அதிர்ச்சியாகதான் இருக்கும். அந்த ஸ்டிக்கரில் உள்ளது PLU Code (Price Lookup Number).

இதனை வைத்து நாம் சாப்பிடும் ஆப்பிள் இயற்கையானதா/மரபணு மாற்று உற்பத்தியா/Chemical உரங்களில் விளைந்ததா என அறிய முடியும்.

* PLU Code-ல் 4 இலக்கம் மட்டும் இருந்தால் – முழுக்க வேதி உரம் கலந்தது.
* PLU Code—ல் 5 இலக்கம் இருந்து அது ‘8’ என ஆரம்பித்தால் அது மரபணு மாற்றம் செய்யப்பட்டது.
* PLU Code—ல் 5 இலக்கம் இருந்து அது ‘9’ என ஆரம்பித்தால் அது முழுக்க இயற்கையானது.

இனி ஆப்பிள் வாங்கும்போது பார்த்து வாங்கலாம். அந்த Sticker—ம் ஆபத்தானதே. ஆதனால், Sticker—யை எடுத்துவிட்டு சாப்பிடவும்.

*Compiled By : Miss. T. Regi*
*Facilitation*

## தெரிந்து கொள்வோம்

### Amazing Facts about Human Eye

* An average person blinks 12 times per minute.
* It composed of more than 2 million working parts.
* Our human eye is 576 mega pixel.
* Corneas are the only tissues that don't require blood.
* It can process 36,000 bits of information every hour.
* The eyeball of a human weighs approximately 28 grams.
* It is impossible to sneeze with eyes open.
* It blinks more than 10,000/day.

### Simple tips to avoid Eye strain and Head ache due to Computer screens and LCD's

* Eye exercise – Blink continuously for 3 seconds. Move the eyeballs up and down, side to side.
* Close your eyes, rest your palm over closed eyes for a few seconds.
* Rotate neck and head – 3 times outstretched, forward & backward and 3 times clockwise & anti-clockwise direction.
* Apply cool impress on eye to give them rest.
* Gentle neck, head and shoulder massage after work.
* Take a break of 20 minutes when needed and do eye and neck exercises for 5 minutes each and palm the eyes for 5 to 10 minutes.

*Compiled By : Mrs. S. Sahayapani Shiny*
*Design*

### Benefits of Red Fruits

* The Red Fruits protect against heart disease, prevent blood clots and improve blood circulation.
* Red Fruit is rich source of antioxidants which protect against cancer diseases.
* Red Fruits contain lycopene which is antioxidant and gives their red color.

*Collected from Internet*

### தன்னம்பிக்கை

ஒரு ஊரில் அரசன் ஒருவன் இருந்தார். அதிகாலையில் எழுந்தவுடன் சூரிய உதயத்தைப் பார்ப்பது அவரது வழக்கம். ஒருநாள் காலை சூரிய உதயத்துக்கு பதில் பிச்சைகாரர் முகத்தில் விழித்து கோபத்தோடு திரும்பிய போது தலையில் அடிப்பட்டு ரத்தம் வந்துவிட்டது. கடுப்பாகி பிச்சைகாரரை அரண்மனைக்கு இழுத்து வரசெய்து தூக்கிலிட கட்டளை பிறப்பித்தார்.

பிச்சைகாரன் கலங்கவில்லை கல கலவென சிரிக்க தொடங்கினான். அரசருக்கு மேலும் கோபம் ஏற்பட்டது. பிச்சைகாரன் சொன்னான், என் முகத்தில் நீங்கள் விழித்தால் உங்களுக்கு சிறுகாயம் மட்டுமே. உங்கள் முகத்தில் நான் முழித்ததால் என் உயிரே போகபோகிறதே... அதை எண்ணி சிரித்தேன். அரசன் தன் தவறு உணர்ந்து தலை குனிந்தான். தண்டனை ரத்து செய்யப்பட்டது.

தைரியம் என்பது தன்னம்பிக்கையின் மறுபெயர். அது இல்லையென்றால், சமயத்தில் உயிரைக் கூட காப்பாற்றிக் கொள்ள முடியாமல் போய்விடும்.

*Compiled By : Mrs. C. Bavani*
*Administration*

### Twenty ways to Better Communication

1. Be clear about objectives of communication.
2. Organize your facts, thoughts (Rehearse if required).
3. Establish eye contact (Do not frequently refer notes / text).
4. Create an atmosphere for free and frank communication.
5. Use simple language, economize on adjectives.
6. Ask for feedback from listener.
7. Make communication relevant and interesting to listener, create suspense.
8. Pause at appropriate time.
9. Use voice, tone, body language to suit the message.
10. Give examples, illustrations.
11. Avoid distracting sounds (mmm…aaa…etc).
12. Emphasize (Communicate with feeling and concern).
13. Be a good listener.
14. Ensure your actions, justify your communication.
15. Communicate at appropriate place and time.
16. Moderate communication with respect to reaction of listener.
17. Reduce length of communication channel.
18. Communicate only when needed.
19. Be brief and clear.
20. Sequence the communication
    I. Say what you are going to say
    II. Say.
    III. Say what you have said

*Compiled By : Mr. S. Mathikrishnan*
*Marketing*

## கவிதைகள்

### Deepavali

The clear blue sky,
The scent of flowers,
The colours of Rangoli,
And the sound of crackers.
The gifts and sweets from dear ones,
And the getting of their love,
The light of the candles below,
And the dazzling fireworks up above.
Lighting lamps at our homes,
Making the less fortunate smile,
Putting on new apparels,
Show our friends some style.
Paying respects to the gods,
And decorating for them the thali,
This is what the occasion is all about,
This is the spirit of Deepavali.

### உலக நலவேட்பு

"வாழ்க வையகம்" "வாழ்க வளமுடன்"

உலகிலுள்ள பொறுப்புடைய தலைவ—ரெல்லாம்
உயிறறிவை உள்ளுணர்வாய் பெறுதல் வேண்டும்
உலகனைத்து நாடுகளின் எல்லை காக்க
ஓருலக கூட்டாட்சி வலுவாய் வேண்டும்
உலகில் போர், பகை, அச்சமின்றி மக்கள்
உழைத்துண்டு வளம் காத்து வாழ வேண்டும்
உலகெங்கும் மனிதகுலம் அமைதியெனும்
ஓர் வற்றாத நன்னிதி பெற்றுய்ய வேண்டும்.

*Compiled By : Mr. V. Azhahesan*
*Marketing*

## சிந்தனைக்கு

சரியான மனப்பாங்கு உள்ள ஒரு நபர் தனது இலக்கை நோக்கி முன்னேறுவதை எந்த சக்தியும் தடுத்துவிட முடியாது தவறான மனப்பாங்குள்ள நபருக்கு உலகில் எந்த சக்தியும் உதவிட முடியாது.

*Compiled By : Mr. K. Manivannan*
*Marketing*

பணியாளர்கள் மற்றும் பணியாளர்களின் குடும்பத்தாரிடமிருந்து கவிதைகள், கட்டுரைகள், கதைகள் வரவேற்கப்படுகிறது.
– Editor

## நம்பித்தான் ஆகவேண்டும்

### 5S (தொடர்ச்சி XLVII)

**இரண்டடி உலகம்**

இங்கே நமக்குள்ள இன்னொரு சவால், யாருக்கு எந்தக் கருவிகள் அதிகம் தேவைப்படுகிறது என்பதைக் கணக்கிட்டு, சரியான இடங்களில் சேமிப்பு அலமாரிகளை அமைக்க வேண்டும்.

உதாரணமாக – நம் வீட்டில் தினந்தோறும் உபயோகப்படுகிற, ஆனால், ஒரு நாளைக்கு இருபது முறைக்கும் குறைவாகப் பயன்படுத்தப்படும் பொருள்கள் என்னென்ன என்று ஒரு பட்டியல் தயாரிப்போம்.

1. பற்பசை / பல்பொடி
2. பிரஷ்
3. சோப்பு
4. பிரஷர் குக்கர்
5. கத்தி
6. சாம்பிராணித் தூள்

மிகப் பெரியதாக நீளக்கூடிய பட்டியல் இது. இப்போதைக்கு ஆறு பொருள்களோடு நிறுத்திக்கொள்வோம். 'செய்டன்' விதிப்படி, இந்த ஆறு பொருள்களையும் ஒரே அலமாரியில் வைத்து, வீட்டின் ஒரு மூலையில் நகர்த்தி வைத்துவிடலாமா? முடியாதுதானே! ஏன்?

ஏனெனில், பற்பசை, பிரஷ், சோப்பு மூன்றும் குளியலறையில் பயன்படக்கூடியவை. பிரஷர்குக்கரும், கத்தியும் சமயலறையில். சாம்பிராணித் தூள் பூஜை அறையில். இந்த ஆறையும் எப்படி ஒரே இடத்தில் வைக்கமுடியும்?.

ஆகவே, முதல் மூன்று பொருள்களையும் ஒரு சிறிய பிளாஸ்டிக் அலமாரியில் பொருத்தி, குளியலறைச் சுவரில் மாட்டுகிறோம். குக்கரை, சமயலறை அலமாரிக்குள் வைக்கிறோம். கத்தியையும், ஸ்பூன், முள் கரண்டி உள்ளிட்ட பிற சிறு பொருள்களையும் ஒரு குவளையினுள் இட்டு, சமயலறைச் சுவரில் மாட்டுகிறோம். சாம்பிராணிப் பொட்டலத்தை, ஸ்வாமி படத்துக்குக் கீழே இருக்கிற அலமாரியில் வைக்கிறோம்.

தொழிற்சாலை, அலுவலகம் என்று எதுவானாலும், இந்த விதி பொருந்தும். எந்தப் பொருள் எங்கே பொருந்தும், யாருக்கு அடிக்கடி தேவைப்படும் என்பதை ஆராய்ந்து, அந்தப் பொருளை அந்தப் பகுதியின் அருகேயே சேமித்து வைக்கவேண்டும்.

தொடரும்...

## COMBINATED STRIPPER COLUMN

